திரு. என் ஏ பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உதவித் தொகை வழங்குவதில் அரசுத்தரப்பி லிருந்து தகுதி வாய்ந்த என்ற அந்த வார்த்தைக்கு என்ன பொருள்கள் அடங்கும், என்ன கருத்து என்பதற்கு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்வார்களா ? எந்த அடிப்படையிலே அந்த தகுதி நிச்சயிக்கப்படுகிறது ? விண்ணப்பித்துள்ள மனுக்கள் அனைத்திலும், எத்தனை தகுதி அடிப்படையில் முடிவு எடுத்து இருக்கிறீர்கள். தகுதி என்பதை மட்டும் தெளிவாகச் சொன்னால் உதவி கோரி விண்ணப்பம் அனுப்புகிறபோது தெளிவாகப் புரிந்து கொள்ள உதவிகரமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அதை அறிவிப்பார்களா என்று எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, ஆதரவற்றவர்களாக இருக்க வேண்டும். ஏழைகளாக இருக்க வேண்டும் ; உழைக்க முடியாதவர்களாக இருக்க வேண்டும் ; 60 வயது நிரம்பியவர்களாக இருக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

குறிப்பு : உடுக்குறியிடாத வினாக்களையும் அவற்றுக்கான விடைகளையும் இணைப்பில் காண்க.

3. அறிக்கை அளித்தல்.

(அ) விதி 107 (1)-ன் கீழ் திருத்த அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 25—3—1982 ஆம் தேதியன்று, 650 ஆம் எண் வினாவின் கீழ் எழுப்பப்பெற்ற துணை வினாவிற்கு அளிக்கப்பெற்ற விடைக்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், சட்டமன்ற பேரவை விதி 107-ன் கீழ் திருத்த அறிக்கை ஒன்றை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, 25—3—1982ம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் உடுக்குறியிட்ட வினா எண். 650 (பழைய எண். 9209) தொடர்பாக நடைபெற்ற விவாவத்தின்போது, உறுப்பினர் திரு. எம். சின்னசாமி, அவர்கள் கீழ்க்கண்ட துணை வினாவினைக் கேட்டிருந்தார் :

1982 செப்டம்பர் 10] (ப. குழந்தைவேலு)

''அங்கீகாரம் பெறாமல் வீட்டு மனை விற்கப்படும்பொழுது பத்திரப் பதிவு செய்யக்கூடாது என்று சட்டமாக்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

இதற்கு ''ஏற்கனவே இருக்கின்ற 1908வது ஆண்டு இந்தியப் பதிவு செய்தல் சட்டத்தில் இதற்கு இடம் இருக்கிறது. அதுவும் உள்ளாட்சி மன்றங்களிடமிருந்து 'நோ அப்ஜெக்ஷன் சர்ட்டிபிகேட் வாங்கி வந்தால் தான் பதிவு செய்யவேண்டுமென்று இருக்கிறது, ஆனால் அதற்கு மாறாக உள்ளாட்சி மன்றங்கள் சட்டத்திலேயே திருத்தம் செய்துவிடலாம் என்பது அரசினுடைய பரிசீலனையிலே இருந்துவருகிறது. என்ற பதிலுக்கு மாறாக கீழ்க்கண்ட திருத்திய பதிலை அளிக்கவிரும்புகிறேன்;

''தலைவர் அவர்களே, காலி மனைகளை வீடு கட்டுவதற்கான மனைகளாகவே விற்கப்படுவதை தடுக்கும் பொருட்டு மனைப் பகுதிகள் விற்பனை சம்பந்தப்பட்ட பத்திரங்கள் பதிவு செய்ய சமர்ப்பிக்கப்படும்போது அத்துடன் உள்ளாட்சி (நகராட்சி அல்லது மாநகராட்சியோ) நிறுவனத்திடமிருந்து ஆட்சேபணை எதுவுமில்லை என்னும் சான்றிதழ் கோரிப் பெற சார்-பதிவாளர்களுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில், 1908-ம் ஆண்டின் இந்திய பதிவு செய்தல் சட்டத்தினை 1908ம் ஆண்டின் மத்தியச் சட்டம்(XVI) திருத்தம் செய்வதைவிட, உள்ளாட்சி நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட சட்டங்களான 1919ம் ஆண்டின் சென்னை மாநகராட்சிச் சட்டம், 1920-ஆம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், மற்றும் 1971-ம் ஆண்டின் மதுரை மாநகராட்சிச் சட்டம், 1981-ம் ஆண்டின் கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டம் ஆகியவற்றை திருத்தம் செய்யலாம் என்ற கருத்துரு ஆய்வில் உள்ளது.

[முற்பகல் 10·10]

4 கவனஈர்ப்பு

செங்கல்பட்டு மாவட்ட கூட்டுறவு கிடங்குகளில் தேங்கியுள்ள காம்பிலெக்ஸ் உரங்கள்

திரு எஸ். டி. உகம்சந்த்: தலைவர் அவர்களே, ''செங்கற்பட்டு மாவட்டத்தில் விவசாய இலாக்கா கிடங்குகளில் 1974 ஆம் ஆண்டு முதல் தேங்கியுள்ள 15:15:15 காம்பிளக்ஸ் உரங்கள் பற்றிய அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே. தற்போது 710 மெட்ரிக் டன் எடையுள்ள என். பி. கே. 15:15:15 காம்பிளக்ஸ் உரம் செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு கிடங்குகளில் இருப்பில் உள்ளது. மேற்படி உரத்தை வெளிச்